# பாரதி மகளிர் கல்லூரி(தன்னாட்சி), வடசென்னை – 108.

## பட்டமேற்பு விழா அறிக்கை – 12.09.2018

*"அறம் பொருள் இன்பமும் வீடும் பயக்கும்*
*புறங் கடை நல் இசையும் நாட்டும்*
*உறும் கவல் ஒன்று உற்றுழியும் கை கொடுக்கும்*
*கல்வியின் ஊங்கு இல்லை*
*சிற்றுயிர்க்கு உற்ற துணை – நீதி நெறி விளக்கம் "*

கல்வி கற்றவர்கள் அறம் பொருள் இன்பம் வீடு என நால்வகைப் பயனை பெறுவதோடு உலகில் நல்ல புகழையும் அடைவார்கள். கவலை ஏற்படும்போது அதிலிருந்து மீள உரிய வழியைத் தரும் கல்வி போல மனிதனுக்கு சிறந்த துணையாக எதுவுமே இருக்க முடியாது.

"வெள்ளத்தால் போகாது வெந்தணலால் வேகாது
கொள்ளத்தான் இயலாது கொடுத்தாலும் நிறைவொழிய குறைபடாது
கள்வர்க்கோ மிக அரிது காவலோ மிக எளிது
கல்வி எனும் பொருள் இங்கிருக்க
உலகமெலாம் பொருள் தேடி அலைவதேனோ? – விவேக சிந்தாமணி"

"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றவை யவை – திருக்குறள்"

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நமது தமிழ்ச்சமூகத்தால் போற்றப்பட்ட கல்விச் செல்வத்தை மாணவிகளின் வளமான வாழ்விற்கும் சீர்மிகு முன்னேற்றத்திற்கும் பயன்படும் வகையில் எம் கல்லூரி கடந்த 53 ஆண்டுகளாக சிறப்புடன் வழங்கி வருகிறது.

1998ஆம் ஆண்டில் தன்னாட்சி நிலைக்கு உயர்த்தப்பட்ட பின் நடைபெறும் 17 வது பட்டமேற்பு விழாவில் 2017-ம் ஆண்டில் தேர்ச்சிப் பெற்ற மாணவிகளின் பட்டமேற்பு அறிக்கையை சமர்ப்பிப்பதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன். எம் கல்லூரியில், முதல் சுழற்சியில் 13 இளநிலைப் பாடப்பிரிவுகளும், 13 முதுநிலை பாடப்பிரிவுகளும், 5 ஆய்வியல் மற்றும் 4 முனைவர் பட்ட பாடப்பிரிவுகளும், இரண்டாம் சுழற்சியில் 5 இளநிலை பாடப்பிரிவுகளும் திறமையான ஆசிரியர்களால், செம்மையாக நடத்தப்பட்டு வருகின்றன. பல பாடப்பிரிவுகளில் ஆங்கில வழிக்கல்வியோடு தமிழ்வழிக்கல்வியும் பயிற்றுவிக்கப்படுகிறது.

ஏப்ரல் 2017-ல் நடைபெற்ற தேர்வுகளில் எம் மாணவியர் பெற்ற தேர்ச்சி விவரம்.

### இளநிலைப் பட்ட வகுப்புகள்:

| | | |
|---|---|---|
| தேர்வு எழுதியவர்கள் | - | 1131 |
| தேர்ச்சி பெற்றவர்கள் | - | 996 |
| தேர்ச்சி விழுக்காடு | - | 88% |

### முதுநிலை பட்ட வகுப்புகள்

| | | |
|---|---|---|
| தேர்வு எழுதியவர்கள் | - | 202 |
| தேர்ச்சி பெற்றவர்கள் | - | 150 |
| தேர்ச்சி விழுக்காடு | - | 74% |

## ஆய்வியல் பட்ட வகுப்புகள்

| | | |
|---|---|---|
| தேர்வு எழுதியவர்கள் | - | 11 |
| தேர்ச்சி பெற்றவர்கள் | - | 10 |
| தேர்ச்சி விழுக்காடு | - | 91% |

இளநிலை வகுப்புகளில், பகுதி-I –ல் – தமிழ், தெலுங்கு மற்றும் ஹிந்தி ஆகிய மொழிகளும், பகுதி II-ல் ஆங்கில மொழியும் கற்றுத் தரப்படுகிறது.

## இளநிலை பாடப்பிரிவில் பகுதி Iல் தேர்ச்சி விபரம்

| | | |
|---|---|---|
| தமிழ் | - | 92 விழுக்காடு |
| தெலுங்கு | - | 100 விழுக்காடு |
| ஹிந்தி | - | 94 விழுக்காடு |

## இளநிலை பாடப்பிரிவில் பகுதி II –ல் தேர்ச்சி விபரம்

| | | |
|---|---|---|
| ஆங்கிலம் | - | 82 விழுக்காடு |

## இளநிலைப் பாடப்பிரிவுகளில் தேர்ச்சி விபரம்:

## இளங்கலை பாடப்பிரிவுகளில் தேர்ச்சி விபரம்:

| | | |
|---|---|---|
| பொருளியல் | - | 92 விழுக்காடு |
| ஆங்கிலம் | - | 98 விழுக்காடு |
| வரலாற்றியல் | - | 80 விழுக்காடு |
| தமிழ் | - | 79 விழுக்காடு |
| வணிகவியல் | - | 96 விழுக்காடு |

## இளம் அறிவியல் பாடப்பிரிவுகளில் தேர்ச்சி விபரம்:

| | | |
|---|---|---|
| உயிர் வேதியியல் | - | 80 விழுக்காடு |
| தாவரவியல் | - | 85 விழுக்காடு |
| வேதியியல் | - | 89 விழுக்காடு |
| கணினியியல் | - | 86 விழுக்காடு |
| புவியியல் | - | 78 விழுக்காடு |
| கணிதவியல் | - | 95 விழுக்காடு |
| இயற்பியல் | - | 79 விழுக்காடு |
| உயர் விலங்கியல் மற்றும் உயிர் தொழில்நுட்பவியல் | - | 93 விழுக்காடு |

## முதுநிலைப் பாடப்பிரிவுகளில் தேர்ச்சி விபரம்:

### முதுநிலை கலையியல் பாடப்பிரிவுகள்:

| | | | |
|---|---|---|---|
| வணிகப் பொருளியல் | - | 89 | விழுக்காடு |
| ஆங்கிலம் | - | 83 | விழுக்காடு |
| வரலாற்றியல் | - | 100 | விழுக்காடு |
| தமிழியல் | - | 71 | விழுக்காடு |
| வணிகவியல் | - | 95 | விழுக்காடு |

### முதுநிலை அறிவியல் பாடப்பிரிவுகள்:

| | | | |
|---|---|---|---|
| உயிர் வேதியியல் | - | 53 | விழுக்காடு |
| தாவரவியல் | - | 67 | விழுக்காடு |
| வேதியியல் | - | 55 | விழுக்காடு |
| கணினி அறிவியல் | - | 86 | விழுக்காடு |
| பயன்பாட்டு புவியியல் | - | 70 | விழுக்காடு |
| கணிதவியல் | - | 56 | விழுக்காடு |
| இயற்பியல் | - | 60 | விழுக்காடு |
| விலங்கியல் | - | 75 | விழுக்காடு |

## ஆய்வியல் நிறைஞர் பாடப் பிரிவுகளில் தேர்ச்சி விபரம்:

| | | | |
|---|---|---|---|
| வரலாறு | - | 100 | விழுக்காடு |
| விலங்கியல் | - | 100 | விழுக்காடு |
| புவியியல் | - | 80 | விழுக்காடு |

உரிய நேரத்தில் பட்டங்களை வழங்கி, இப்பட்டமேற்பு விழா இனிது நடைபெற காரணமாய் இருந்த பெருமை சென்னைப் பல்கலைக் கழகத்தையே சாரும்.

கனவு என்பது காலை வரை கல்வி என்பது கல்லறை வரை என்பது போல மாணவியராகிய நீங்கள் மேன்மேலும் கல்வி பெற்று இன்று போல் பல பட்டங்கள் பெற்று சீரும் சிறப்புடன் வாழ எம் கல்லூரி ஆசிரியர்கள் அனைவர் சார்பிலும் நல்லாசிகளையும் நல்வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றி!

**********